TNVR020032272019

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.

**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B (Hons)., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.

2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 04-ஆம் நாள் செவ்வாய்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.639/2019**

| | | | |
|---|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | | அரசுக்காக:–<br>காவல் சார்பு ஆய்வாளர்,<br>திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையம்,<br>குற்ற எண்.269/2019 | |
| குற்றம்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | | முகமது ரியாஸ், (19/19),<br>த/பெ.அப்துல்ரகிம்,<br>துடியாண்டி அம்மன் கோவில் தெரு,<br>திருவில்லிபுத்தூர். | |
| சம்பவம் நடந்த நாள் | | 11.05.2019 | |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | | 25.05.2019 | |
| எதிரி | | எதிரி கைதான நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 25.05.2019 | 05.06.2019 |
| அரசு தரப்பு விசாரணை முடிவுற்ற நாள்<br><br>எதிரி தரப்பு விசாரணை முடிவுற்ற நாள் | –<br><br>– | 23.07.2026<br><br>இல்லை | |
| எதிரி மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | – | 05.09.2019 | |
| குற்றம் | | | |

| | | |
|---|---|---|
| 1. சாட்டப்பட்டது | – | எதிரி மீது இதச பிரிவுகள் 457, 380 உ/இ 34 ன் கீழ், |
| 2. வனையப்பட்டது | – | எதிரி மீது இதச பிரிவுகள் 454, 380 உ/இ 34–ன் கீழ், |
| காலதாமதத்திற்கான காரணம் | – | சாட்சி விசாரணைக்காக தாமதம் |
| அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை பற்றிய விவரங்கள் | – | அ.சா.1 25.05.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br>அ.சா.2 17.06.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br>அ.சா.3 17.06.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br>அ.சா.4 14.07.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br>அ.சா.5 23.07.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை. |
| எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | – | 29.07.2026 |
| எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச. பிரிவு 311 பிரிவின் படியான மனுக்கள் | – | இல்லை. |
| அரசு தரப்பு வழக்கறிஞர் | – | திருமதி.P.பெத்துரதி MBA., B.L., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | – | திரு.R.வீரமணி, B.Sc., M.L., |
| எதிரியின் கூற்று | – | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |

| | | |
|---|---|---|
| நீதிமன்றத்தின் முடிவு | – | முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீது இதச பிரிவுகள் 454, 380 உ/இ 34–ன் கீழான, குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>மேலும் இவ்வழக்கில் வழக்கு சொத்தான ரூ.15,000/– இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பி.ஆர்.எண்.297/2019 என வழங்கப்பட்டுள்ளது. மேலும் சா.பொ.1 ஆன ரூ.15,000/–த்தை சி.ஆர்.எம்.பி.எண்.4107/2019 மனுவினை தாக்கல் செய்து அதில் பிறப்பித்த உத்தரவின்படி அதன் உரிமையாளரான பால்சாமி என்பவர் இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ளார். எனவே மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அவரே நிரந்தரமாக வைத்துக்கொள்ளுமாறு உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது 30.07.2019 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 29.07.2026-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி MBA., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.R.வீரமணி, B.Sc., M.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப் பின் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.........

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கின் புகார்தாரர் அவரது வீட்டு வரண்டாவில் கோவிலுக்கு நேர்த்தி கடன் செலுத்துவதற்காக இரண்டு செம்மறி கிடா வளர்த்து வந்ததாகவும், 11.05.2019ம் தேதி 11 மணியளவில் இரண்டு செம்மறி கிடாக்களுக்கு தீவனம் வைத்துவிட்டு, வரண்டாவின் முன்பக்க கதவை பூட்டிவிட்டு, வீட்டினுள் தூங்கியதாகவும், 12.05.2019ம் தேதி காலை 06.00 மணிக்கு தூங்கி எழுந்து ஆடுகள் கட்டியிருந்த இடத்தை தூப்பதற்காக சென்ற போது, அதில் ரூ.16,000/– மதிப்புள்ள ஒரு செம்மறி கிடா காணாமல் போனதாகவும், அதை எதிரி கன்னமிட்டு ஒருமித்த கருத்துடன் 11.05.2019ம் தேதி இரவு 1–1/2 மணிக்கு கிளம்பி வந்து புகார்தாரரின் வீட்டு காம்பவுண்டு சுவர் ஏறி உள்ளே சென்று புகார்தாரரின் வீட்டு வராண்டாவில் கட்டிப் போட்டிருந்த செம்மறி கிடா ஒன்றினை திருடிய குற்றத்திற்காக எதிரி மீது இதச பிரிவுகள் 457, 380ன் கீழ், தண்டிக்கத்தக்கவர் என்று திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிகளுக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் குவிமுச பிரிவு 207-ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, குற்றம் குறித்து வினவியபோது பொய் வழக்கு, குற்றவாளிகள் இல்லை என்றார். போதிய கால அவகாசத்திற்கு பிறகு எதிரி மீது இதச பிரிவுகள் 454, 380ன் கீழ், கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது எதிரி பொய் வழக்கு, தான் குற்றவாளி இல்லை என மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.5 சாட்சிகள் விசாரணை செய்து, அ.சாஆ.1 முதல் அ.சாஆ.8 வரையிலான ஆவணங்களும், சா.பொ.1ம் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–</u>

4-(1) அ.சா.1 திரு.மாடமுத்து தனது சாட்சியத்தில், தான் தற்போது

மங்காபுரத்தில் குடியிருந்து மதுபானக்கடை பாரில் வேலை செய்து வருவதாகவும், தன்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், கடந்த 25.05.2019 அன்று காலை 11.15 மணியளவில் தானும் சித்திரைக்கனி என்பவரும் செல்வராஜ் பெட்டிக்கடை அருகே நின்று கொண்டிருந்த போது போலீசார் தங்களை விசாரித்து படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதில் தானும் செல்வராஜ் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும், பார்வை மகஜர் அசாஆ.1 என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(2) அ.சா.2 திரு.தாமோதரக்கண்ணன் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், இவ்வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியிலுள்ள கையெழுத்து தன்னுடையது இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(3) அ.சா.3 திரு.சுரேஷ் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியாது என்றும், அ.சா.2 ஐ தனக்கு தெரியும் என்றும், இவ்வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியிலுள்ள கையெழுத்து தன்னுடையது இல்லை என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(4) அ.சா.4 திரு.கனகராஜ் தனது சாட்சியத்தில், தான் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து பணிஓய்வு பெற்று தற்போது சத்திரப்பட்டியில் குடியிருந்து வருவதாகவும், இதற்கு முன்பு தான் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் பணியிலிருந்தபோது கடந்த 25.05.2019 அன்று 10.15 மணிக்கு நிலைய பொறுப்பிலிருந்தபோது திருவில்லிபுத்தூர் கோட்டை தலைவாசல் தெருவை சேர்ந்த சிவன் மகன் பால்ச்சாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று உத்தரவுப்படி நிலைய குற்ற எண்.269/2019 பிரிவுகள்.457, 380 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், புகார்மனு அசாஆ.2 என்றும், முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 என்றும், பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அசலையும் வாதியின்

புகார்மனுவையும் இணைத்து சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அதில் ஒரு நகலை சார்பு ஆய்வாளர் அவர்களின் புலன் விசாரணைக்கும் வைத்ததாகவும், இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் அவர்கள் தன்னை விசாரித்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(5) அ.சா.5 திரு.கருத்தப்பாண்டி தனது சாட்சியத்தில், தான் தற்போது சென்னை அண்ணாசாலை D2 காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இதற்கு முன்னர் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் 25.05.2019 அன்று சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் கனகராஜ் என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்திருந்த குற்ற எண்.269/2019 பிரிவுகள்.457, 380 இதச வழக்கை தனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 11.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் மாடமுத்து, சித்திரைக்கனி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், வரைபடம் அசாஆ.4 என்றும், பின்னர் சாட்சிகள் பால்ச்சாமி, சாந்தி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், விசாரணையில் சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் அன்றைய தினமே 14.15 மணியளவில் திருவில்லிபுத்தூர் டு திருவண்ணாமலை ரோட்டிலுள்ள வெள்ளமடம் கருப்பசாமி கோவிலருகே வரும்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சந்தேகப்படும் வகையில் வந்த எதிரி முகமதுரியாஷ் ஐ சந்தேகத்தின்பேரில் விசாரணை செய்து முன்னுக்குபின் முரணாக சொன்னதால் காரணம் கூறி கைது செய்தபோது எதிரி தானாக முன்வந்து எந்தவித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் இல்லாமல் கொடுத்தத ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் தாமோதரகண்ணன், சுரேஷ ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.5 என்றும், பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் 16.30 மணியளவில் திருவில்லிபுத்தூர் துடியாண்டியம்மன் கோவில் தெருவிலுள்ள எதிரியின் வீட்டின் முன்பு வைத்து எதிரி வீட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.15,000/- ஐ அத்தாட்சி தயார் செய்து

அத்தாட்சியின் பேரில் கைப்பற்றி சாட்சிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அத்தாட்சி அசாஆ.6 என்றும், புகைப்படத்திலுள்ள பணம் ரூ.15,000/- சாபொ.1 என்றும், பின்னர் எதிரி மற்றும் பணத்துடன் நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து புகார்தாரரிடம் மறுவாக்குமூலம் பதிவு செய்து எதிரியை பாராவசம் ஒப்படைத்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து, படிவம் 91 அசாஆ.7 என்றும், பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் கனகராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை பிரிவுகள்.457, 380 இதசவிலிருந்து பிரிவுகள்.457, 380 உ/இ 34 இதச ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.8 என்றும், பின்னர் 12.06.2019 அன்று இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள்.457, 380 உ/இ 34 இதச வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

5) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டு, எதிரிக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சிய சங்கதிகளை தொகுத்து எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரி சாட்சியை பொய் எனக் கூறி மறுத்தார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என சொன்னார். இவ்வழக்கில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) <u>தீர்வுக்குரிய பிரச்சனை :-</u>

அரசு தரப்பால் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

7. புகார்தாரர் அவரது வீட்டு வரண்டாவில் கோவிலுக்கு நேர்த்தி கடன் செலுத்துவதற்காக இரண்டு செம்மறி கிடா வளர்த்து வந்ததாகவும், 11.05.2019 ம் தேதி 11 மணியளவில் இரண்டு செம்மறி கிடாக்களுக்கு தீவனம் வைத்துவிட்டு,

வரண்டாவின் முன்பக்க கதவை பூட்டிவிட்டு, வீட்டினுள் தூங்கியதாகவும், 12.05.2019ம் தேதி காலை 06.00 மணிக்கு தூங்கி எழுந்து ஆடுகள் கட்டியிருந்த இடத்தை தூப்பதற்காக சென்ற போது, அதில் ரூ.16,000/– மதிப்புள்ள ஒரு செம்மறி கிடா காணாமல் போனதாகவும், அதை எதிரி கன்னமிட்டு ஒருமித்த கருத்துடன் 11.05.2019ம் தேதி இரவு 1–1/2 மணிக்கு கிளம்பி வந்து புகார்தாரரின் வீட்டு காம்பவுண்டு சுவர் ஏறி உள்ளே சென்று புகார்தாரரின் வீட்டு வராண்டாவில் கட்டிப் போட்டிருந்த செம்மறி கிடாவை திருடினார் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

8. இவ்வழக்கின் புகார்தாரர் இறந்துவிட்டதால், பார்வை மகஜர் சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில், தான் தற்போது மங்காபுரத்தில் குடியிருந்து மதுபானக்கடை பாரில் வேலை செய்து வருவதாகவும், தன்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், கடந்த 25.05.2019 அன்று காலை 11.15 மணியளவில் தானும் சித்திரைக்கனி என்பவரும் செல்வராஜ் பெட்டிக்கடை அருகே நின்று கொண்டிருந்த போது போலீசார் தங்களை விசாரித்து படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதில் தானும் செல்வராஜ் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவரை குறுக்கு விசாரணை செய்த போது மேற்படி தன் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்பது பற்றி தனக்கு தெரியாது என்றும், தான் கையெழுத்து மட்டும் தான் செய்து கொடுத்ததாகவும், மேற்படி ஆவணத்தில் வேறு யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

9. ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் எதிரியை தனக்கு தெரியாது என்றும், இவ்வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியிலுள்ள கையெழுத்து தன்னுடையது இல்லை என்று கூறி அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

10. ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில், இவ்வழக்கின் எதிரியை தெரியாது என்றும், அ.சா.2 ஐ தனக்கு தெரியும் என்றும், இவ்வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியிலுள்ள கையெழுத்து தன்னுடையது இல்லை என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

11. அ.சா.4 தனது சாட்சியத்தில், கடந்த 25.05.2019 அன்று 10.15 மணிக்கு நிலைய பொறுப்பிலிருந்தபோது திருவில்லிபுத்தூர் கோட்டை தலைவாசல் தெருவை சேர்ந்த சிவன் மகன் பால்ச்சாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று உத்தரவுப்படி நிலைய குற்ற எண்.269/2019 பிரிவுகள்.457, 380 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அசலையும் வாதியின் புகார்மனுவையும் இணைத்து சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அதில் ஒரு நகலை சார்பு ஆய்வாளர் அவர்களின் புலன் விசாரணைக்கும் வைத்ததாகவும், இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் அவர்கள் தன்னை விசாரித்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12. இவ்வழக்கில் புலன் விசாரணை செய்து, எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றி கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளித்த அசா.5 ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுவிட்டதாக தீர்மானிக்க இயலாது. இவ்வழக்கில் புகார்தாரரான திரு.பால்சாமி அவர்கள் இறந்துவிட்டதால், பார்வை மகஜர் சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில், மேற்படி தான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்து என்று தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டும், மேற்படி புகார்தாரர் இறந்துவிட்ட நிலையில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையெழுத்து செய்ததாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளான அ.சா.2 மற்றும்

அ.சா.3 ஆகியோர் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கு சம்பவத்தில் எதிரி தான் குற்றவாளி என முடிவு செய்ய சாட்சிகளும், சான்றாவணங்களும் போதுமானதாக இல்லை என்பதாலும், எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவர்களை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீது பிரிவுகள் 454, 380 உ/இ 34–ன் கீழான, குற்றத்திற்கு குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

142. மேலும் இவ்வழக்கில் வழக்கு சொத்தான ரூ.15,000/– இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பி.ஆர்.எண்.297/2019 என வழங்கப்பட்டுள்ளது. மேலும் சா.பொ.1 ஆன ரூ.15,000/–த்தை சி.ஆர்.எம்.பி.எண்.4107/2019 மனுவினை தாக்கல் செய்து அதில் பிறப்பித்த உத்தரவின்படி அதன் உரிமையாளரான பால்சாமி என்பவர் இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ளார். எனவே மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அவரே நிரந்தரமாக வைத்துக்கொள்ளுமாறு உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04-ஆம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

அ.சா.1 – திரு.மாடமுத்து

அ.சா.2 – திரு.தாமோதரக்கண்ணன்

அ.சா.3 – திரு.சுரேஷ்

அ.சா.4 – திரு.கனகராஜ்

அ.சா.5 – திரு.கருத்தப்பாண்டி

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

அ.சா.ஆ.1 – பார்வை மகஜர்

அ.சா.ஆ.2 – புகார் மனு

அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4 – வரைபடம்

அ.சா.ஆ.5 – ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ.6 – அத்தாட்சி

அ.சா.ஆ.7 – படிவம் 91

அ.சா.ஆ.8 – சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை

**<u>அரசு தரப்பு சான்றுப் பொருள்</u>** –

சா.பொ.1 – பணம் ரூ.15,000/–

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

| | |
|---|---|
| 1. | எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தப்படவில்லை. |
| 2. | வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 3. | நடுவர் தீர்ப்புரையின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டுள்ளார். |
| 4. | இவ்வழக்கில் வழக்குச் சொத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| 5. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |